**ஜனவரி – 11**


# TNPSC துளிகள்

- சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவரான மலாலா யூசப்சாய் தான் உலகம் முழுவதும் மேற்கொண்ட பயணத்தையும் அகதிகள் முகாமிற்குச் சென்றதையும் தொகுத்து ஒரு புதிய புத்தகமாக "We are displaced: My Journey and Stories from Refugee Girls Around the World" என்ற பெயரில் எழுதியுள்ளார்.
- பீகாரின் இடது கை சுழற்பந்து வீச்சாளரான அசுதோஷ் அமன் ரஞ்சி சீசனில் தனது 65-வது விக்கெட்டை வீழ்த்திய பின் அதிகபட்ச விக்கெட் எடுத்தவராக மிகப்பெரும் வீரர் பிஷன் சிங் பேடியை முந்தி சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பொறித்துள்ளார்.
- M.C. மேரிகோம் சர்வதேச குத்துச்சண்டை சங்கம் வெளியிட்ட சமீபத்திய தரவரிசையில் 45-48 கிலோகிராம் குறைந்த எடைப் பிரிவில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- ஊடக அமைப்பு, ஊக்குவிப்பு மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஆகியவற்றுக்கான செயலாக்க நடவடிக்கை குழுவானதும் பல்லூடக ஆலோசனை அமைப்புமான ஊடகச் சுதந்திரத்திற்கான கூட்டணி (Alliance for media freedom) என்ற அமைப்பின் தலைவராக THG பப்ளிஷிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் தலைவரான நரசிம்மன் ராம் எனப்படும் N. ராம் (இந்து குழுமம்) நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஹாட் ஸ்டார் நிறுவனத்தின் முன்னாள் தலைமை செயல் அதிகாரி அஜித் மோகன் முகநூல் (Facebook) இந்தியா நிறுவனத்தின் புதிய துணைத் தலைவராகவும் மேலாண் இயக்குநராகவும் அதிகாரப் பூர்வமாக பதவி ஏற்றுக் கொண்டார்.
- பஞ்சாபில் நடைபெற்ற 106-வது இந்திய அறிவியல் மாநாட்டில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (Defence Research and Development Organisation DRDO) "ஆண்டிற்கான சிறந்த பார்வையாளர்" என்ற விருதைப் பெற்றிருக்கின்றது.
- சந்தைக் கட்டுப்பாட்டாளரான செபி மூலதனச் சந்தையை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான புதிய வழிகளைப் பற்றி ஆராய்ந்திடுவதற்கு உதவிடும் வகையில் ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்திருக்கின்றது. இவ்வாறு அமைக்கப்பட்ட குழு சங்கர் தே என்பவரால் தலைமை தாங்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## ரைசினா உரையாடல்

- ரைசினா உரையாடலின் 4-வது பதிப்பு புது தில்லியில் அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேசன் என்ற அமைப்பின் கூட்டணியோடு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- இக்கூட்டத்தின் கருத்துரு "உலக மறுசீரமைப்பு : புதிய வடிவியல்களில்; நிலையற்ற கூட்டணிகள்; நிச்சயமற்ற விளைவுகள்" என்பதாகும்.
- 2015-ம் ஆண்டில் முதல்முறையாக நடத்தப்பட்ட இந்த ரைசினா உரையாடல் என்பது இந்தியாவின் ஒரு தலைமைத்துவமான வருடாந்திர புவியரசியல் மற்றும் புவியுக்திசார் மாநாடாகும்.




## குழந்தைப் பாதுகாப்பிற்கான தேசிய ஆலோசனை 2019

- புதுதில்லியில் இந்தியா வாழ்விட மையத்தில் 2019 ஆம் ஆண்டின் குழந்தைப் பாதுகாப்பிற்கான தேசிய ஆலோசனையின் முதல் பதிப்பு நடத்தப்பட்டது.
- இது மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகத்தின் செயலாளர் தலைமையில் நடத்தப்பட்டது.
- இந்த சட்டம் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களால் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களைக் கண்காணிக்கும் நிகழ்ச்சியைப் பின்பற்றிட எண்ணுகின்றது.

## ஹென்லி கடவுச்சீட்டு தரவரிசை

- ஹென்லி கடவுச்சீட்டு தரவரிசையைப் பொறுத்தவரைத் தொடர்ந்து முதல் இடத்தில் ஜப்பான் தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.

THE 10 MOST POWERFUL PASSPORTS IN THE WORLD


| Rank | Country | Visa free | Rank | Country | Visa free |
|---|---|---|---|---|---|
| 1 | Japan | 190 | 7 | Belgium, Canada, Greece, Ireland | 184 |
| 2 | Singapore, South Korea | 189 | 8 | Czech Republic | 183 |
| 3 | France, Germany | 188 | 9 | Malta | 182 |
| 4 | Denmark, Finland, Italy, Sweden | 187 | 10 | Australia, Iceland, New Zealand | 181 |
| 5 | Luxembourg, Spain | 186 | | | |
| 6 | Austria, Netherlands, Norway, Portugal, Switzerland, UK, US | 185 | | | |

- இரண்டாவது இடத்தில் தென்கொரியாவும் சிங்கப்பூரும் இணைந்துள்ளது.

- இந்தியா 2018 ஆம் ஆண்டில் இருந்த 81-வது இடத்திலிருந்து இரண்டு இடம் முன்னேறி இந்த வருடம் 79வது இடத்தைப் பிடித்திருக்கின்றது.
- அமெரிக்கா மற்றும் நார்வே உடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் நாடுகள் தரவரிசைகளில் முதல் மூன்று இடங்களையடுத்து இருக்கும் இடங்களைப் பிடித்து இருக்கின்றன.
- அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகியவற்றின் தரநிலைகள் தொடர்ந்து இறங்கு முகத்தில் இருக்கின்றன.
- தரவரிசைகளின் கடைசி 5 நிலைகள் எரித்ரியா, ஏமன், பாகிஸ்தான், சோமாலியா, சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகியவற்றால் நிரப்பப்பட்டிருக்கின்றன.

## டி.என்.ஏ தொழில்நுட்ப (பயன்பாடு மற்றும் உபயோகம்) ஒழுங்குமுறை மசோதா 2019

- மக்களவை ஒரு சிறிய விவாதத்திற்குப் பிறகு "டிஎன்ஏ தொழில்நுட்ப (பயன்பாடு மற்றும் உபயோகம்) ஒழுங்குமுறை மசோதாவை" நிறைவேற்றியிருக்கின்றது.
- இந்த மசோதா டிஎன்ஏ தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் உபயோகம், காணாமல் போனவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள், விசாரணைக் கைதிகள் மற்றும் அடையாளம் தெரியாமல் இறந்து போன நபர்கள் ஆகியோரின் அடையாளம் காணுதல் ஆகியவற்றை ஏற்படுத்துதவதற்காக மேலே கூறியவற்றை போன்றவற்றை முறைப்படுத்துகின்றது.
- இம்மசோதாவின் முக்கிய உட்கூறுகள் டிஎன்ஏ ஒழுங்குமுறை மன்றத்தை ஏற்படுத்துவது, டிஎன்ஏ சோதனை மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளும் டிஎன்ஏ பரிசோதனைக் கூடங்களின் அங்கீகாரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- இந்த மசோதாவில் உள்ளவாறு தேசிய மற்றும் பிராந்திய டிஎன்ஏ தரவுத்தளங்களை ஏற்படுத்துவது தடயவியல் விசாரணைகளில் உதவிடும்.




# சர்வதேசச் செய்திகள்

## கவுதமாலாவில் தண்டனைகளுக்கு எதிரான சர்வதேச ஆணையம்

- கவுதமாலாவில் அந்நாட்டு அதிபர் ஜிம்மி மோரலெஸ் சமீபத்தில் தண்டனைகளுக்கு எதிரான சர்வதேச ஆணையத்திற்கு எதிரான உரிமைக் கட்டளையினை முடிவுக்கு கொண்டு வருவது பற்றி அறிவித்திருக்கின்றார்.

- இந்த தண்டனைகளுக்கு எதிரான சர்வதேச ஆணையமானது ஜப்பானிய மொழியில் சுருக்குப் பெயராக சிசிக் என்று அறியப்டும்.
- ஆனால் கவுதமாலாவின் அரசியலமைப்பு நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒருதலைப் பட்சமாக முடிவுக்குக் கொண்டு வரும் ஜனாதிபதியின் முடிவினைத் தற்காலிகமாக ரத்து செய்திருக்கின்றது.
- கவுதமாலாவில் உள்ள தண்டனைகளுக்கு எதிரான சர்வதேச ஆணையம் அந்நாட்டில் ஏற்பட்ட கடுமையான குற்றங்கள் பற்றி ஆராய்ந்து விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.




## ஜனநாயக குறியீட்டுத் தரவரிசை 2019

- ஐந்து விரிவான பிரிவுகளில் 60 குறியீடுகள் மூலம் 167 நாடுகளைத் தரவரிசைப்படுத்தும் ஜனநாயக குறியீட்டுத் தரவரிசையைப் பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு வெளியிட்டு இருக்கின்றது.
- இந்த தரவரிசை முழுமையான ஜனநாயகம், குறைபாடுள்ள ஜனநாயகம், கலப்பு ஆட்சிமுறை, சர்வாதிகாரம் என ஏதேனும் ஒரு வகையில் ஒவ்வொரு நாட்டையும் வகைப்படுத்துகின்றது.
- 7.23/10 என்ற மதிப்பெண்ணுடன் இந்தியாவானது 41வது இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இது குறைபாடுள்ள ஜனநாயகம் என்ற பிரிவில் வைக்கப்பட்டிருக்கின்றது.
- ஒட்டுமொத்த ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன மட்டுமே முழுமையான ஜனநாயக நாடுகளாகும்.
- இந்த ஜனநாயகக் குறியீட்டுத் தரவரிசையின் சில முக்கிய தகவல்கள் பின்வருமாறு
    - உலகின் 4.5 சதவிகித மக்கள் மட்டுமே முழுமையான ஜனநாயகத்தில் வசிக்கின்றனர்.
    - முதல் முறையாக மூன்று வருடங்களில் 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த உலகின் மதிப்பெண் நிலையாக இருக்கின்றது.
    - 2017 ஆம் ஆண்டில் பெற்ற மதிப்பெண்களை ஒப்பிடும்போது 42 நாடுகள்


தங்கள் தரவரிசை மதிப்பெண்களில் சரிவினை சந்தித்திருக்கின்றன. மேலும் 48 நாடுகள் தங்கள் மதிப்பெண்ணை அதிகரித்திருக்கின்றன.

- இத்தரவரிசையில் அரசியல் பங்கேற்பு என்பது மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள பிரிவாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## GST விலக்குப் பட்டியல் இரட்டிப்பு

- GST ஆணையம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் ரூபாய் 1 கோடியிலிருந்து 1.5 கோடியாக தொகுப்புத் திட்டத்தினைப் பெற்றிட வருடாந்திர விற்றுமுதலை உயர்த்தியிருக்கின்றது.
- இந்நடவடிக்கை சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பின் கீழ் சிறிய வியாபாரங்களுக்கு நிவாரணத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது.
- இந்த ஆணையம் GST விலக்கு வரம்பை வடகிழக்கு மாநிலங்களுக்கு 20 லட்சம் வரையிலும் நாட்டின் எஞ்சியிருக்கும் பகுதிகளுக்கு 40 லட்சம் வரையிலும் இரட்டிப்பாக்கியிருக்கின்றது.
- மேலும் இந்த ஆணையம் கேரளா அரசு இரண்டு வருட காலத்திற்கு உள்மாநில விற்பனையின் மீது பேரிடர் வரியாக 1 சதவிகிதத்தை விதித்திட அனுமதி அளிக்கின்றது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## விண்வெளி எரிபொருள் - ஐஐடி ஆராய்ச்சியாளர்கள்

- மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நீர் மூலக்கூறுகளின் உதவியுடன் கார்பன் டை ஆக்ஸைடுகளை படிக வடிவத்தில் அமைத்து விண்வெளி எரிபொருளை உருவாக்கியுள்ளனர்.
- இது எதிர்காலத்தில் பசுமை இல்ல வாயுக்களை கட்டுப்படுத்த உதவும்.
- அதி உயர் வெற்றிடமாக கருதப்படும் வளிமண்டல அழுத்தத்தைவிட ஓராயிரம் பில்லியன் மடங்கு குறைவானதாகவும் வெப்பநிலை ஏறத்தாழ 263 டிகிரி செல்சியஸ்

உடையதாகவும் கொண்ட இது வெற்றிடத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ஆய்வகத்தில் சோதிக்கப்பட்ட இந்த படிநிலைகள் மிக ஆழ்ந்த விண்வெளியில் இருக்கின்றன.
- தேசிய அறிவியல் நிறுவனத்தின் வழிமுறைகள் பத்திரிக்கையில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## பொது ஒப்புதல் திரும்பப் பெறுதல்

- சத்தீஸ்கர் மாநில அரசு, தனது மாநிலத்தில் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்காக மத்தியப் புலனாய்வு அமைப்பிற்கு அளித்திருந்த பொது ஒப்புதலைத் திரும்பப் பெற்றிருக்கின்றது.
- ஏற்கெனவே விசாரணைகள் மேற்கொள்வதில் சிபிஐக்கு வழங்கியிருந்த பொது அனுமதியை திரும்பப் பெற்றிருந்த மேற்கு வங்கம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பட்டியலில் சத்தீஸ்கர் இதன் மூலம் இணைந்திருக்கின்றது.

## இந்தியாவின் நீண்ட ஒற்றைப் பாதை எஃகு வடத்திலான தொங்கு பாலம்

- அருணாச்சலப் பிரதேச முதல்வர் இந்தியாவின் 300 மீட்டர் தூரத்திலான மற்றும் எஃகு வடத்திலான நீண்ட தொலைவு ஒற்றைப் பாதை தொங்குப் பாலத்தை திறந்து வைத்தார். இது சீனாவின் எல்லையருகில் அமைந்திருக்கும் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் மேல் சியாங் மாவட்டத்தில் உள்ள சியாங் நதியின்மீது கட்டப்பட்டிருக்கின்றது.



- பையோரங் பாலம் என்றழைக்கப்படும் இந்த தொங்கு பாலம் வடகிழக்கு மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழுள்ள காலாவதியாகாத மத்திய வள இருப்புத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டது.
- இது ஏறக்குறைய 40 கி.மீ. தொலைவிற்கு இங்கியாங் மற்றும் துதிங் ஆகிய நகரங்களுக்கு இடையே உள்ள தூரத்தைக் குறைக்கின்றது. முன்பு இருந்த சாலையின் தூரம் 192 கிலோ மீட்டராகும்.

# முக்கிய தினங்கள்

## பாரதீய பிரவசி தினம் / வெளிநாட்டு இந்தியர் தினம் – ஜனவரி 09

- வெளிநாட்டு இந்தியர் தினம் அல்லது பாரதீய பிரவசி தினம் ஒவ்வொரு இரு வருடத்திற்கு ஒரு முறையும் ஜனவரி 09-ம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.




- இது இந்தியாவின் வளர்ச்சியில் வெளிநாட்டு இந்திய வாழ் சமூகத்தின் பங்களிப்பைக் குறிக்கின்றது.
- 1915 ஆம் ஆண்டு ஜனவரி 09-ம் தேதி தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு மகாத்மா காந்தி வந்தார். மேலும் இந்திய சுதந்திரப் போராட்டத்தைத் தலைமை தாங்கிய மிகப்பெரிய நபரானார்.
- முன்னதாக 2015-ம் ஆண்டு வரை, இது ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்பட்டது. ஆனால் தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுசரிக்கப்படுகின்றது.

## உலக இந்தி தினம் – ஜனவரி 10

- ஒவ்வொரு வருடமும் ஜனவரி 10-ம் தேதி உலக இந்தி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது 1975-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் துவக்கி வைக்கப்பட்டு நடத்தப்பட்ட முதலாவது உலக இந்தி மாநாட்டின் ஆண்டு விழாவாக அனுசரிக்கப்படுகின்றது.
- உலக இந்தி தினத்தின் முக்கிய நோக்கம் உலகளாவிய அளவில் இந்தி மொழியை மேம்படுத்துவதாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14ம் தேதியன்று அனுசரிக்கப்படும் தேசிய இந்தி தினம் என்பது தேவநாகரி எழுத்து வடிவில் இந்தி மொழியை அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறிக்கின்றது.
- உலக இந்தி மாநாடு 2006 ஆம் ஆண்டு ஜனவரி 10-ம் தேதி முதன்முதலாக நடத்தப்பட்டது.

- - - - - - - - - - - - - - -